# விளக்கு வைத்தல் - இலங்கைத் தமிழ்ச் சாசனங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**S.Sajitharan**
Department of History, University of Jaffna, Sri Lanka
***Sivaruby17@gmail.com***

விளக்கு வைத்தலென்பது தமிழர் வாழ்வியல் முறைகளில் குறிப்பிடத்தக்கதொரு முக்கியத்துவம் வாய்ந்த பண்பாட்டு மரபாகும். தற்காலத்திலும் கூட விளக்கு வைத்தல் (ஏற்றுதல்) என்பது தமிழர் வாழ்வியல் நடைமுறைகளுடன், நம்பிக்கைகளுடன் பின்னிப்பிணைந்த ஒரு நிகழ்வாக அமைந்துள்ளது. இந் நடைமுறைகள், நம்பிக்கைகள் என்பனவற்றை சமயம் சார்ந்ததொரு விடயமாகவே பெரும்பாலும் பார்க்க முடிகின்றது. இதனை இலங்கைத் தமிழ்ச்சாசனங்கள் கூறும் செய்திகளுடாகவும் அடையாளப்படுத்த முடிகின்றது. இலங்கையின் பல்வேறு பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட எண்ணிக்கையில் அதிகமான தமிழ்ச் சாசனங்களில் விளக்குவைத்தல் மற்றும் விளக்குவைத்தலுடன் தொடர்புடைய செய்திகளினை கி.பி ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து 19ஆம் நூற்றாண்டு வரை தொடர்ச்சியாக இனங்காண முடிகின்றது. இச்செய்திகளினை பின்வருமாறு பார்க்கலாம்: கோயிலுக்கு விளக்கு தானம் செய்தல், கோயிலில் விளக்கு வைப்பதற்கு வேண்டிய நெய் மற்றும் தேங்காய் எண்ணெயினைப் பெறுவதற்கு வேண்டிய ஒழுங்கினை மேற்கொள்ளுதல், விளக்கு வைப்பதற்கு நிலையிருப்பாக பொன் வழங்கியமை, நந்தா விளக்கு மற்றும் திருவிளக்கு வைப்பதற்கு காசு, பொற்காசு வழங்குதல், விளக்கு வைப்பதற்கு வேண்டிய நெய்யினை பெறும் பொருட்டு பசுக்கள், எருமைகள், மற்றும் சவாமூவ பேராடுகள் வழங்கியமை, நெய் அளந்து கொடுப்பதற்குரிய நிபந்தனைகள், தேங்காய் எண்ணெயினை பெறும் பொருட்டு தென்னந்தோப்புகளை வழங்குதல், எண்ணெய் வணிகத்தில் ஈடுபட்ட சமூகவகுப்பினர், விளக்கேற்றுவதற்கு நிலங்களை மானியமாக வழங்குதல் போன்றனவாகும். கோயில்களுக்கு அளிக்கப்பட்ட விளக்கு தானமானது திருநந்தா விளக்கு, தாரநிலை விளக்கு, சந்தி விளக்கு, பாவை விளக்கு, குத்து விளக்கு, அடுக்கு விளக்கு, உலோகத்திலான தூபங்கள் என பலவாறு அமைகின்றன. பிற்பட்ட காலத்தில் தானமாக வழங்கிய உலோகத்திலான விளக்குகளில் தானம் அளித்தவரின் பெயர்களினையும் காணமுடிகின்றது. சாசனச் செய்திகளினை பார்க்கும்போது, அரசன் முதல் சாதாரண மக்கள் வரை தானம் வழங்கியிருந்தமையினை காணமுடிகின்றது. சில சாசனங்களில் தானம் வழங்கிய காசு, பொன், நிலம், பசு, எருமை, ஆடு என்பவற்றை பெறுப்பேற்று விளக்கு ஏற்றுதற்கான ஏற்பாடுகளை வணிகர்கள், வணிக கணங்கள், கோயிலுடன் தொடர்புடைய பல பிரிவினர் போன்றோர் மேற்கொண்டிருந்தனர். இவ்வகையில் விளக்கு வைத்தல் என்ற பண்பாட்டு மரபுசார் செய்திகளினை இலங்கையில் கிடைத்த தமிழ்ச் சாசனங்கள் ஊடாக இனங்காண்பதும், அவற்றை தொகுத்து ஆராய்வதும் இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும். அத்துடன் விளக்கு வைத்தல் மரபு தமிழர் வாழ்வியலுடன் பிணைக்கப்பட்டிருக்கும் விதத்தினை ஆராய்வதும் இவ்வாய்வின் இன்னொரு நோக்கமாகும். இவ்வாய்வு நோக்கங்களினை நிறைவு செய்வதன் பொருட்டு இலங்கையில் வெளியிடப்பட்ட தமிழ்ச்சாசனங்களின் கல்வெட்டுப் படிகளும், அவ்கல்வெட்டுப் படிகளை அடிப்படையாகக் கொண்டு இதுவரை வெளியிடப்பட்ட நூல்கள், கட்டுரைகள் என்பன இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் தொல்லியல் ஆய்வுகளுடாக வெளிப்படுத்தப்பட்ட அகல்விளக்கு, சுடுமண் விளக்குகள் போன்ற தொல்லியல் சான்றுகள் இம்மரபின் தொன்மையினை வெளிப்படுத்தி நிற்கின்றன. இதனுடாக தொன்மையான காலம் தொட்டு சமகாலம் வரைக்கும் விளக்குவைத்தல் பண்பாட்டுச் சிறப்பினை பார்க்க முடிகின்றது.

***திறவுச்சொற்கள்:*** *விளக்கு, தானம், தமிழ்ச் சாசனம், பண்பாட்டு மரபு, வாழ்வியல் முறைகள்*

# Burning Lamp - A Study Based on Sri Lankan Tamil Inscriptions

Burning lamp is a cultural tradition of particular importance in the Life style of Tamil. Even in modern times, Burning Lamp is an intertwined phenomenon with the practices and beliefs of the Tamils. These practices and beliefs are often seen as a matter of religion. This can also be identified by the messages conveyed by the Sri Lankan Tamil inscriptions. From the 9th century A.D. to the 19th century A.D., the information relating to burning lamp in a large number of Tamil inscriptions found in different parts of Sri Lanka can be identified. Looking at the inscriptions, it can be seen that donations were given from the king and also ordinary people. In some of the inscriptions, money, gold, land, cows, buffaloes and goats were donated and arrangements were made by merchants, merchant’s guilds and temple’ people to Burning lamp. In this way, the main objective of this research is to identify the traditional messages of burning lamp through the Tamil inscription found in Sri Lanka and to analyze them. Also, another aim of this research is to investigate the way in which the tradition of burning lamps is linked to the lifestyle of Tamils. In order to complete the objectives of this research, the estampage of Tamil inscriptions found in Sri Lanka and the books and articles published so far based on those inscriptions have been used in this research. Also, the archeological evidences such as akal viḷakku, Terracotta lamps, which have been revealed through archeological studies, reveal the antiquity of this tradition. Through this, one can see the importance of the tradition of burning lamp from the ancient period to the present day.

***Keywords:*** *Lamps, Donation, Tamil Inscriptions, Tradition, Life Style of Tamil*